# தமிழ்நாடு அடிப்படைப்பணி – அலுவலக உதவியாளர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை

(கோவை, திருப்பூர், சேலம், குன்னூர், ஈரோடு மற்றம் நாமக்கல்)

கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கோவை, திருப்பூர், சேலம், குன்னூர், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட தொழிலாளர் துறை அலுவலகங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நியமன அதிகாரி /கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையரால் நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து **28.12.2018** அன்று பிற்பகல் **5.30** மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **1. பதவியின் பெயர்** | அலுவலக உதவியாளர் |
| **2. பணியின்தன்மை** | தொழிலாளர் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவிடுதல். |
| **3. சம்பளம்** | ரூ.15700 – 50000 என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| **4. வயது** | 01.07.2018 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். |

| **இனசுழற்சி முறை** | **அதிகபட்ச வயது வரம்பு (01.07.2018 அன்றுள்ளவாறு)** |
|---|---|
| பொதுப்பிரிவு | 30 வயதுக்குள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | 32 வயதுக்குள் |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | 35 வயதுக்குள் |
| புகுமுக வகுப்பு (PUC) / மேல்நிலைப்பள்ளி (HSC) / பட்டயப்படிப்பு (Diploma) / (10+2+3) முறையான பாடத்திட்டம் மூலம் பட்டப்படிப்பு (Degree) – ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | உச்ச வயது வரம்பு இல்லை |
| SSLC தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | 34 வயதுக்குள் |

| | |
|---|---|
| SSLC தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | 40 வயதுக்குள் |
| 40 வயதுக்குள் பணியிடம் காலியின்மை காரணமாக பணியிழந்த அரசுப்பணியாளர்களுக்கு | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக முந்தைய அரசுப்பணிபுரிந்த காலம் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு | 53 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லாதோர் (Other than SC / ST / BC) | 48 வயதுக்குள் |
| மாற்றுத்திறனாளிகள் | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |

**5. மொத்த பணியிடங்கள் – 5 எண்ணிக்கை**

**6. இடஒதுக்கீடு விவரங்கள்**

| GT/OC | BC | BC(M) | MBC / DNC | SC | SCA | ST | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 0 | 1 | 0 | 1 | 0 | 5 |

**1. கல்வித்தகுதி** – எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் [விதி 5 (2) (a) ]

**2. சிறப்பு தகுதி –** மிதிவண்டி ஓட்ட தெரிந்திருத்தல் வேண்டும். [விதி 5 (3) (b)]

**3. விண்ணப்பங்கள்**–

இப்பணிக்கான விண்ணப்பங்களை கோவை, திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, குன்னூர், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகங்களிலும், கோவை, சேலம் மற்றும் குன்னூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களிலும் மற்றும் கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**4. கடைசி நாள்**–

தற்போது விண்ணப்பிக்கும் போது அவர்கள் விண்ணப்பங்களை தற்போது பணிசெய்யும் விவரங்களுடனும், அனைத்து கல்வி சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ், வேலைவாய்ப்பு அட்டை மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை மற்றும் கலப்பு திருமணம் மற்றும் பிற வகைகள் முன்னுரிமை பெற்றோர்) பாஸ்போட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்டியும், இருபுகைப்படங்களை தனியாகவும் இணைத்து மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்கள் சுய சான்றொப்பத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு 28.12.2018 ஆம் தேதி பிற்பகல் 5.30 மணிக்குள் கிடைக்குமாறு தபாலிலோ நேரிலோ அனுப்பப்பட வேண்டும்.

**கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,**
**டாக்டர் பாலசுந்தரம் ரோடு,**
**ஆர்.டி.ஓ அலுவலக வளாக பின்புறம்,**
**கோயம்புத்தூர் –641 018.**

(காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது )

**5.** மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்வோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ, கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத்தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒப்பம்
கூடுதல் தொழிலாளர்ஆணையர்
கோவை.

# <u>தொழிலாளர் துறை</u>
## <u>அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான</u>
## <u>விண்ணப்ப படிவம்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பத்தாரரின் பெயர் | | | |
| 2 | தந்தை / கணவர் பெயர் | | | |
| 3 | பிறந்த தேதி* | | | |
| 4 | பாலினம் | | ஆண்/பெண்/இதர இனம் | பாஸ்போர்ட் அளவு புகைப்படம் |
| 5 | கல்வித்தகுதி* | | | |
| 6 | மதம் | | | |
| 7 | இனப்பிரிவு* | | OC/BC/MBC& DNC/SC/SCA/ST | |
| 8 | சாதி (உட்பிரிவுடன்) * | | | |
| 9 | நிரந்தர முகவரி | | | |
| 10 | முன்னுரிமை கோருகிறீரா?* (ஆம் - எனில் உரியவற்றை தேர்ந்தெடுக்கவும்)<br>1. ஆதரவற்ற விதவை<br>2. மாற்றுத் திறனாளி<br>3. முன்னாள் இராணுவ வீரர்<br>4. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்<br>5. இதர இனங்கள் | | | |
| 11 | தமிழ்வழிக் கற்றவரா ?* | | | |
| 12 | வேலைவாய்ப்பு அலுவலக பதிவு விவரம் | | | |
| 13 | குற்றவழக்குகள் ஏதேனும் இருப்பின் அதன் விவரம் | | | |

இடம் -

நாள் -

விண்ணப்பத்தாரரின் கையொப்பம்

( * உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

# <u>விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்</u>

1) விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, தபால் மூலமாகவோ – நேரிலோ அனுப்பலாம். ஒன்றிற்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2) சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பததில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு புகைப்படத்தின் மேல் பகுதியில் சுய சான்றொப்பத்துடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

3) அனைத்து சான்றாவணங்களின் நகல்கள் மட்டுமே உரிய முறையில் சுய சான்றொப்பம் செய்து விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கக் கூடாது.

4) முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.